## இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் - 2017

---

இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றலும் காசுப் பாய்ச்சலும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 01**

(அ) மீளாய்வாண்டின்போது மஹோபாத்யாய நிதியத்திலிருந்து ரூபா 3,000,000 க்கான நிலையான வைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டபோதும், அது நிலையான வைப்பில் பிரிதாகக் காட்டப்படாது சேமிப்புக் கணக்கு மீதியில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்று சுழற்சி முறைப்படி தயாரிக்கப்பட்டிருந்தபோதும், நியமத்தின் 132(அ) பந்தியின் பிரகாரம் அது குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) வெளிவாரி பரீட்சைக் கூறு நடாத்தப்படும் கொழும்பு 07, பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள பல்கலைக்கழகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர் பௌத்த அலுவல்கள் அமைச்சிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 10,000,000 பெறுமதியான காணி மற்றும் பல்வேறு நன்கொடைகளாகப் பெறப்பட்ட ரூபா 81,122 பெறுமதியான உபகரணங்களும் ரூபா 210,655 பெறுமதியான மரத் தளபாடங்களும் மீளாய்வாண்டு வரை நன்கொடைக் கணக்கில் முன்கொண்டு வரப்பட்டவாறிருந்தன. குறித்த சொத்துக்களது தேய்மானத்துக்கு நிகராக அவற்றைக் காலக் கழிவுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை மூலதன நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 2,387,930 பெறுமதியான புத்தகங்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் உரிய தேய்மானமும் காலக்கழிவும் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் பிரகாரம் ரூபா 401,707 ஆக இருத்தல் வேண்டும். ஆயினும், 2014 ஆம் ஆண்டின்போது நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 349,322 பெறுமதியான புத்தகங்களுக்கு மீளாய்வாண்டிற்கான தேய்மானத்தைக் கணிப்பிடுகையில் ரூபா 70,383 ஆக அதனைக் கருதியமையால் ஆண்டிற்கான தேய்மானமும் காலக் கழிவும் ரூபா 55,786 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டு வரை நன்கொடையாகப் பெறப்பட்ட புத்தகங்களதும் சஞ்சிகைகளதும் ரூபா 1,244,125 காலக் கழிவுக்குட்படுத்தப்படவில்லை. மேலும், கணிப்பீட்டுத் தவறின் காரணமாக 2012 முதல் 2017 வரை நன்கொடையாகப் பெறப்பட்ட சொத்துக்களுக்கு உரிய தேய்மானமும் காலக் கழிவும் ரூபா 1,447,274 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியளவில் 32 நிர்மாண மற்றும் வழங்கல் ஒப்பந்தங்களின் பொருட்டு 26 நிறுவனங்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த ஒப்பந்தங்கள் மீதான நிறுத்தி வைத்த தொகை ரூபா 14,964,281 ஆகும். குறித்த நிர்மாண மற்றும் வழங்கல் சம்பந்தமான தொடர் நடவடிக்கைகளில் நிலவிய குறைபாடுகள் காரணமாக நிறுத்தி வைத்த அம்மொத்த தொகையில் 72 சதவீதம் அல்லது ரூபா 10,837,524 இரண்டு ஆண்டுகளுக்கும் அதிகமாக இருந்து வருவது அவதானிக்கப்பட்டது. அதில் ரூபா 9,380,019 தொகையானது 2013 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலை ஒப்பந்தங்களுக்காக பொறியியல் துறை தொடர்பான மத்திய உசாத்துணைப் பணியகத்திற்குச் செலுத்த வேண்டிய 02 ஒப்பந்தங்கள் மீதான நிறுத்தி வைத்த பணமென்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 135 | கணக்கீட்டுப் பிரிவில் ரூபா 25,000 வீதப்படியான கட்டு நிதிகள் பேணப்பட்டிருந்ததுடன், குறித்த கட்டு நிதிகளின் பொறுப்பும் நிதிப் பிரமாணம் 135 க்கு முரணாக பிரதான காசாளரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 371 (2)(ஆ) | நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே முற்பணம் வழங்கப்படலாமென்றாலும் நிறைவேற்று தரத்தைச் சாராத உத்தியோகத்தர்களுக்கும் முற்பணம் வழங்கப்பட்ட 64 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

| | |
|---|---|
| (iii) நிதிப் பிரமாணம் 371 (5) | செயல் நிமித்த முற்பணத்தைப் பெறும் உத்தியோகத்தர் ஒருவர் குறித்த பணி முடிவடைந்ததும் அல்லது 10 நாட்களுக்குள் அம்முற்பணத்தைத் தீர்த்து வைக்க வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 828,901 உடைய 33 முற்பணங்களைத் தீர்த்து வைப்பதில் 11- 56 நாட் தாமதம் நிலவியதுடன், ரூபா 46,165 கூட்டுத் தொகையுடைய 4 முற்பணமானது செலவு எதுவும் மேற்கொள்ளப்படாது திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2016 டிசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச வாகனப் பராமரிப்பு தொடர்பான பொது நிர்வாகச் சுற்றறிக்கை 3.1 ஆம் பிரிவு | சகல எரிபொருள் பரிசீலனையினதும் 12 மாதங்களின் பின்னர் அல்லது 25,000 கிலோமீட்டர் பயணஞ் செய்ததன் பின்னர் அல்லது இயந்திரம் தொடர்பான பிரதான பழுதுபார்த்தலின் பின்னரான காரணங்களுக்கிடையே முதன் முதலாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தின் பின்னர் எரிபொருள் நுகர்வு எவ்வாறு உள்ளது என்பது பரிசீலிக்கப்பட வேண்டுமாயினும், 2014 ஆகஸ்டில் பரிசீலித்ததன் பின்னர் மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக 3 ஆண்டுகளாக எரிபொருள் நுகர்வு தொடர்பான அறிக்கைகள் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேறு ரூபா 8,665,039 பற்றாக்குறையாகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,099,101 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 9,764,140 நலிவுக்குள்ளாகியிருந்தது. மீண்டுவரும் செலவினத்திற்கான அரசாங்க உதவி ரூபா 24,661,000 அதிகரித்தபோதும், ஆளுக்குரிய வேதனமும் பிற செலவினங்களும் முறையே ரூபா 26,947,051 மற்றும் ரூபா 5,557,419 என அதிகரித்தமை மேற்படி நலிவுக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்யை 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2013 ஆம் ஆண்டின் ரூபா 2,300,007 பற்றாக்குறையானது 2014, 2015 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2,626,061 மற்றும் ரூபுா 36,960,804 பற்றாக்குறையாக அதிகரித்திருந்தன. முன்னைய ஆண்டில் ரூபா 1,099,101 மிகை ஏற்பட்டுள்ளது. எனினும், மீளாய்வாண்டில் மீண்டும் ரூபா 8,665,039 பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், அரச வரி மற்றும் தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 149,207,572 ஆகவிருந்த பங்களிப்பு தொடர்ந்து அதிகரித்து மீளாய்வாண்டினது இறுதியளவில் ரூபா 279,062,969 ஆக உருவாகியிருந்தது.

**3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது கல்விசார் நடவடிக்கைகளுக்காக 438 உள்ளக மாணாக்கருக்குச் செலவாகிய மொத்த மீண்டுவரும் செலவினத் தொகையானது ரூபா 282,381,892 ஆகும். முன்னைய ஆண்டில் 378 மாணாக்கரின் பொருட்டுச் செலவாகிய மொத்த மீண்டுவரும் செலவினத் தொகை ரூபா 248,048,703 ஆகும். அதற்கமைய, மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் ஒரு மாணாக்கருக்கான கிரயம் முறையே ரூபா 644,708 மற்றும் ரூபா 656,214 என்பனவாகும். ஆகவே, மீளாய்வாண்டில் மாணாக்கரது எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பால் ஒரு மாணாக்கருக்கான கிரயம் கிட்டத்தட்ட 2 சதவீதம் குறைவடைவதற்கு பிரதான பங்களிப்பாக அமைந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகவே, செலவினக் கட்டுப்பாட்டு விதி முறைகளைக் கடைப்பிடிப்பதற்குப் புறம்பாக சேர்த்துக் கொள்ளப்படும் மாணாக்கரது எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதிலும் பல்கலைக்கழகம் கவனம் செலுத்த வேண்டும்.

(ஆ) அரசாங்க மானியத்தைவிட பல்கலைக்கழகத்தின் பிரதான வருமானமாகிய வெளிவாரி கற்கை நெறிகளை நடாத்துவதன் மூலம் மீளாய்வாண்டில் பெறப்பட்ட வருமானம் ரூபா 42,975,538 ஆகும். பெறப்பட்ட மிகை ரூபா 11,102,664 அதாவது 25.8 சதவீதமாகும். எவ்வாறாயினும், முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ரூபா 32,091,746 வருமானத்தின் 32.1 சதவீதமாகிய ரூபா 10,294,831 மிகை பெறப்பட்டமையால் மீளாய்வாண்டில் வெளிவாரிக் கற்கை நெறிகளை நடாத்தும் செலவினக் கட்டுப்பாடு தொடர்பாகப் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**3.3 பல்கலைக்கழகத்துக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பரீட்சைகளில் நிலவிய குறைபாடுகள், ஆட்சேர்ப்பில் உள்ள குறைபாடுகள், ஊழியர்களைப் பயிற்றுவிப்பதில் நிலவிய குறைபாடுகள், இடமாற்றத்தில் நிலவிய குறைபாடுகள், சம்பளங்களையும் படிகளையும் வழங்குவதிலான குறைபாடுகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் எதிராக 12 நபர்கள் பல்கலைக்கழகத்திற்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் 12 வழக்குகளைத் தொடுத்திருந்தனர்.

(ஆ) ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் தான் முன்பு பணியாற்றிய வேறொரு பல்கலைக்கழகக் காலத்திற்குரிய பணிக்கொடையைக் கோரி 2016 ஒக்டோபர் 13 ஆந் திகதி பல்கலைக்கழகத்திற்கு எதிராக ஹோமாகம மஜிஸ்டிரேட் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார்.

(இ) சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பெண் உத்தியோகத்தர் ஒருவர் தன்னை எழுதுவினைஞர் பதவியில் மீண்டும் அமர்த்துமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு 2009 மார்ச் 05 ஆந் திகதி தள்ளுபடியாகியது. அவர் மீண்டும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார். 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி வழக்கு விசாரிக்கப்படவிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 நடவடிக்கைகளும் மீளாய்வும்

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பௌத்த சமயத்தைப் பரப்புதல் மற்றும் தர்ம உபதேசங்களை போதிப்பதற்காக பௌத்த தர்மம் மற்றும் நல்லொழுக்கம் தொடர்பான கலையைப் பயிற்றுவித்தல், பாளி மொழி, பௌத்த கலாசாரம் மற்றும் பௌத்த கண்காட்சிகளை ஏற்படுத்தி மேம்படுத்தல் மற்றும் தற்போதைய உலக தரத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் அக் கல்வியை கட்டியெழுப்புதல், பிரிவெனாக்களிலும் பாடசாலைகளிலும் அதற்குச் சமமான நிறுவனங்களிலும் புத்த சமயம் மற்றும் பாளி மொழிகளைக் கற்பித்தலுக்காக பிக்கு மாணவ தேரர்களையும் இளம் ஆண் பிக்கு மாணவர்களையும் பயிற்றுவித்தல் போன்ற பிரதான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 1981 இன் 74 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மூலம் இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவால் முன்னைய ஆண்டில் 74 கலைமாணி மற்றும் 87 பட்டப்பின் படிப்பு பட்டங்கள் என்பன வழங்கப்பட்டதுடன், மீளாய்வாண்டில் 190 சாதாரண கலைமாணி மற்றும் 160 பட்டப்பின் படிப்பு பட்டங்கள் என்பன வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டில் உள்ளகப் பரீட்சைப் பிரிவு 90 சாதாரண கலைமாணிப் பட்டம் மற்றும் விசேட கலைமாணிப் பட்டம் என்பவற்றை வழங்கியிருந்தது. மீளாய்வாண்டில் அது 70 ஆகக் குறைவடைந்திருந்தது.

(ஆ) கடந்த 5 ஆண்டுகளின்போது பல்கலைக்கழகம் 1899 வெளிவாரிப் பட்டங்களை வழங்கியபோதும், அக்காலப்பகுதியின்போது வழங்கப்பட்ட உள்ளகப் பட்டங்களது எண்ணிக்கை 374 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, பல்கலைக்கழகத்தின் வளமானது குறைவாகப் பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட வெளிவாரிப் பட்டமளிப்புக்கு ஒப்பாக, அதி கூடிய வளம் பயன்படுத்தப்பட்ட உள்ளகப் பட்டங்களை வழங்குதல் மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) பல்கலைக்கழகத்திற்கு மாணாக்கரை ஆட்சேர்த்தல்

2013 முதல் 5 ஆண்டுகளின்போது உள்ளக மாணாக்கரது ஆட்சேர்ப்பு தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| கல்வி ஆண்டு | விண்ணப்பித்தோரது எண்ணிக்கை | ஆட்சேர்க்கப்பட்டோரது எண்ணிக்கை | ஆட்சேர்க்கப்படாதவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2013/2014 | 190 | 93 | 97 |
| 2014/2015 | 255 | 108 | 147 |
| 2015/2016 | 474 | 110 | 364 |
| 2016/2017 | 366 | 130 | 236 |
| 2017/2018 | 287 | 140 | 147 |
| மொத்தம் | 1572 | 581 | 991 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய 5 ஆண்டுகளின்போது 1,572 பேர் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு விண்ணப்பித்திருந்தபோதும், அதில் 581 பேர் மாத்திரம் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அதற்கமைய, விண்ணபித்தவர்களில் 37 சதவீதமே ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். பல்கலைக்கழக வளத்தை அதி கூடிய வினைத்திறனுடன் பயன்படுத்தி மாணாக்கரை அதிகளவில் ஆட்சேர்ப்பதால் ஏற்படக் கூடிய சமூக, பொருளாதார நன்மைகள் தொடர்பாக முகாமைத்துவம் போதிய கவனம் செலுத்தவில்லை.

(ii) இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 4(xv) பிரிவின் பிரகாரம், வாடகை மற்றும் குத்தகை அடிப்படையிலேனும் விடுதி வசதிகளைப் பெற இயலுமாயினும், அது கருத்திற் கொள்ளப்படாது பல்கலைக்கழக விடுதிகளின் இட வசதியை மாத்திரமே கருத்திற் கொண்டு மாணாக்கரது ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக உள்ளக மாணாக்கருக்கு விரிவுரை வழங்குவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சகல கல்விப் பிரிவுகள் தொடர்பாகவும் கல்வியாண்டு ஆரம்பமாவதற்கு முன்னர் விரிவுரை வழங்கும் விதம், நேரம் மற்றும் குறித்த விரிவுரையாளர்களை வெவ்வேறாக விரிவுரைகளில் ஈடுபடுத்தும் திட்டம் என்பன தயாரிக்கப்பட வேண்டுமாயினும், பல்கலைக்கழகத்தின் இரு பீடங்களின் கல்விப் பிரிவுகளுக்குரிய விரிவுரைத் திட்டம் அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பௌத்த கல்வி பீடத்தில், தொல்பொருளியல் கல்விப்பீடத்தின் 04 விரிவுரையாளர்களுக்கென பீடத்தால் வழங்கப்பட்ட பொது நேர அட்டவணை மற்றும் மாணாக்கர் கையொப்பமிடும் பதிவேடு ஆகியன இணக்கஞ் செய்யப்பட்டபோது அவ்விரிவுரையாளர்கள் அரையாண்டில் வழங்க வேண்டிய 270 மணி நேர விரிவுரைகளில் 59½ மணித்தியாலங்கள் குறைவாக விரிவுரை வழங்கியிருந்ததுடன், பௌத்த கலாசார கல்விப் பிரிவின் விரிவுரை நேர அட்டவணை மற்றும் வருகை ஏடு என்பவற்றை இணக்கம் செய்கையில் 21 விடயங்களில் உள்ளக விரிவுரைகளில் 24 மணி நேர குறைவும் 20 விடயங்களில் வெளிவாரி விரிவுரை 110 மணித்தியாலங்கள் குறைவாகவும் விரிவுரை நிகழ்த்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன. அவ்வாறு விரிவுரை மணித்தியாலங்கள் குறைவடைந்ததன் காரணமாக பாட விதானத்தில் ஏற்படும் தாக்கம் தொடர்பாக பௌத்த கல்விப் பீடம் போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(iii) மொழிக் கல்விப் பீடத்தில், சிங்கள கல்விப் பிரிவில் விரிவுரைக்கென ஆட்சேர்க்கப்பட்ட வெளிவாரி விரிவுரையாளர்கள் இருவர் முறையே 41 மணித்தியாலங்கள் மற்றும் 57 மணித்தியாலங்கள் குறைவாக விரிவுரையாற்றியிருந்ததுடன், சமஸ்கிருத கல்விப் பிரிவின் நேர அட்டவணையையும் மாணாக்கர் வருகை ஏட்டையும் இணக்கம் செய்தபோது நேர அட்டவணைப்படி நடாத்த வேண்டிய விரிவுரை மணித்தியாலங்களிலும் பார்க்க 09 விடயங்களில் உள்ளக விரிவுரை மணித்தியாலங்கள் 109

குறைவடைந்தும் 12 விடயங்களில் வெளிவாரி விரிவுரை மணித்தியாலங்கள் 215 குறைவடைந்தும் விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்தன. மேலும், பாளிக் கல்விப் பிரிவின் 2017 ஆம் ஆண்டினது முதலாவது செமஸ்டரின்போது விரிவுரையாற்றும் நேர அட்டவணை மாணாக்கர் கையொப்பமிடும் ஏட்டுடண் இணக்கம் செய்யப்பட்டபோது நேர அட்டவணைப் பிரகாரம் 28 விடயங்களில் 150 மணித்தியாலங்கள் விரிவுரை குறைவாக நடாத்தப்பட்டிந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு விரிவுரை மணித்தியாலங்கள் குறைவடைந்ததன் மூலம் பாட விதானம் மட்டுப்படுத்தப்படுவது சம்பந்தமாக மொழிகளுக்கான கல்விப்பீடம் போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(iv) மொழிக் கல்விப் பீடத்தின் பாளிக் கல்விப்பிரிவின் மாணாக்கரது கையொப்பமிடும் பதிவேட்டில் 11 சந்தர்ப்பங்களிலும், பௌத்த கல்விப் பீடத்தின் பௌத்த கலாசாரக் கல்விப்பிரிவின் மாணாக்கர் கையொப்பமிடும் பதிவேட்டில் 8 சந்தர்ப்பங்களிலும் விரிவுரை நேரம் அதிகரித்துக் காட்டப்படும் விதத்தில் விரிவுரை மணித்தியாலங்கள் மாற்றஞ் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிடத்தை அடுத்துள்ள காணியில் அமைந்துள்ள ஹோமாகம மாவட்ட கமத்தொழில் பயிற்சி நிலையத்தினர் தமது எல்லையைக் குறிக்கும் வேலைகளில் ஈடுபடுகையில் அவ்வளாகத்திறகும் நிர்வாகக் கட்டிடத்திற்கும் இடையே உள்ள தொலைபேசி இணைப்புகள் பாதிப்புக்குள்ளாகியிருந்தன. 2017 மார்ச் 23 ஆந் திகதி அவற்றைப் பழுதுபார்ப்பதற்கு பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட செலவு ரூபா 514,625 ஆகும். இவ்விழப்பிற்குப் பொறுப்பான ஹோமாகம மாவட்ட கமத்தொழில் நிலையத்திடமிருந்து அவ்விழப்பை அறவிடுவதற்கு முகாமைத்துவம் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிலலை.

(இ) எதிர்பார்க்கும் நுகர்வின் அளவினைச் சரிவர மதிப்பிடாது கையிருப்பைப் பேணுதல் மற்றும் குறித்த பிரிவுகள் விண்ணப்பிக்கும் அளவுக்கு அதிகமாக கொள்ளவனவுகளை மேற்கொள்ளல் போன்ற காரணங்களால் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்படாது அகற்றுமாறு பரிந்துரைக்கப்பட்ட ரூபா 345,642 பெறுமதியான பொருட் கையிருப்பில் 98 சதவீதமும் டோனர் மற்றும் கார்ட்ரிஜ் என்பவற்றை உள்ளடக்கியனவாகும்.

## 4.3 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணி 204 ஆகும். அதில் 43 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிலவியது. இதற்கமைய, அங்கீகரிக்கப்பட்ட 59 கல்விசார் பதவியணியில் 10 விரிவுரையாளர்களுக்கான பதவிகள் மற்றும் நூலகர் பதவி என்பனவும் அங்கீகரிக்கப்படட 13 நிர்வாகப் பதவிகளில் பிரதிப் பதிவாளர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், சிரேஷ்ட உதவி நிதியாளர், உதவிப் பதிவாளர் என ஒவ்வொரு பதவி வெற்றிடங்களும் நிலவின.

(ஆ) 2015 மார்ச் 30 முதல் வெற்றிடமாக இருந்த பல்கலைக்கழக நூலகர் பதவிக்குத் தகுதியானவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகையில் செபடிகல் விடுமுறையில் இருந்த பிரிதொரு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பெண் நூலகர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டிற்கு நியமிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை அறிந்ததன் பின்னர் அது தவறான நடவடிக்கை

எனவும் நிரந்தர நூலகரை ஆட்சேர்ப்பது துரிதப்படுத்தப்பட வேண்டுமெனவும் 106 ஆம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரை செய்திருந்தது. எவ்வாறாயினும், அது புறக்கணிக்கப்பட்டு 2017 ஏப்ரல் 27 முதல் 2018 மார்ச் 26 வரை றுஹுனு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பெண் நுலகருக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டு சம்பளமும் படியுமாக ரூபா 674,343 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்த நியமனம் முடிவடைந்ததன் பின்னரும் 2018 யூலை மாதமளவிலும் குறித்த பதவி வெற்றிடமாக இருந்தது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுவதுடன், மீளாய்வாண்டில் பல்கலைக்கழகம் தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்பட வேண்டுமென அறிந்திருக்கவில்லை.

(அ) மேற்குறிப்பிட்டவாறு 2030 ஆம் ஆண்டின் ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் பல்கலைக்கழகம் தனது பரப்பெல்லைக்கேற்ப அடைய வேண்டிய நோக்கமாக புத்ததர்மத்தைப் பரப்புவதற்காக இணைந்த நிறுவனங்களுடன் ஊடாக நடவடிக்கைகளை மேம்படுத்தி மாணாக்கர்களது எண்ணிக்கையை அதிகரித்தலை இனங்கண்டு கொண்டிருந்தது. அப் பரப்பெல்லைக்குள் வரும் ஏனைய நோக்கங்களாக, வெளிநாட்டு இணைந்த நிறுவனத்தை மேம்படுத்தல், வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்புக்காக பட்டதாரிகளை உருவாக்குதல், பல்கலைக்கழகத்தினுள் அமுலாகும் மூலதனச் செயற்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், வெளிவாரி பட்டப்படிப்புக் கற்கை நெறிகளினூடாக வேலைகளையும் பதவிகளையும் அதிகரிப்பதற்குப் பங்களிப்பு வழங்குதல் போன்ற நோக்கங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அமுலாக்குதல் சம்பந்தமாக பல்கலைக்கழகத்தினது பணிகள் தொடர்பாகக் கவனம் செலுத்துபவர்களாக அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புகள் போன்றவற்றை இனங்கண்டுகொண்டுள்ளதாக அறிவித்திருந்தபோதும், பல்கலைக்கழகம் அவற்றைக் குறிப்பாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் பல்கலைக்கழத்தினது இலக்கைத் தயாரிக்கையில் பங்குபற்றுதலில் பங்களிப்பு நிரூபணம் ஆகாதிருப்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) எந்தவொரு பணியினதும் பிழையற்ற செயலாற்றலை அளவிடுவதற்கு பிழையற்ற தரவு அடிப்படை பேணப்படுதல் அத்தியாவசியமானபோதும், பல்கலைக்கழகம் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்குகளை அடையும் விதத்தை அளவிடுவதற்கான பிழையற்ற அடிப்படையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திராமை அவதானிக்கப்பட்டது. இதன் பொருட்டு ''போதியளவு பதவியணியினர் இல்லாதிருத்தல்'' மற்றும் ''நிதியேற்பாட்டுக் குறைவு'' போன்றன காரணமாக அமைந்துள்ளன என பல்கலைக்கழகம் குறிப்பிட்டிருந்தது.

(ஈ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கை அடைவதற்குத் தயாராகும்போது ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பைக் கொண்டிராததால் இலக்கிடப்பட்ட நோக்கத்தை அடைவதற்குத் திட்டமிடல் மற்றும் முன் கூட்டியே தயாராகுதல் ஆகிய நடவடிக்கைகள் மிகவும் மந்த கெதியில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பொருட் கொள்வனவு

பல்கலைக்கழகம் பொருட்கொள்வனவு வழிகாட்டிக்குப் புறம்பாகச் செயற்பட்ட சில சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) எட்டு அலுவலக உபகரணங்களது 38 கூறுகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,325,250 செலவழிப்பதெனப் பொருட்கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டபோதும், 38 கூறுகளுக்குப் பதிலாக 251 கூறுகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன், அதற்கென ரூபா 8,244,910 செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, மதிப்பீட்டுப் பெறுமதியை விட 522 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 6,919,660 அதிகமாகச் செலவாகியமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டினது பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடங்காத 25 அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களுக்குரிய 393 மூலதனப் பொருட் கூறுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்கென ரூபா 4,508,101 செலவிடப்பட்டுமிருந்தது.

(இ) பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடங்கிய 36 அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களது 68 கூறுகளின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 6,370,750 ஆகும். இவற்றை மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது மதிப்பிடப்பட்ட செயற்பாட்டுச் செலவினம் ரூபா 259.3 மில்லியன் ஆகுமாயினும், உள்ளபடியான செலவினம் ரூபா 334.4 மில்லியனாகியமையால் மதிப்பீட்டை விட 28.9 சதவீத செலவின அதிகரிப்பு ஏற்பட்டது.

(ஆ) ஐந்து செலவின விடயங்களின் பொருட்டு முன்னைய ஆண்டில் உள்ளவாறு செலவாகியது ரூபா 29.7 மில்லியானகும். எனினும், மீளாய்வாண்டினது செலவினம் ரூபா 21.8 மில்லியன் என மதிப்பிடப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டினது உள்ளவாறான செலவினம் ரூபா 37.9 மில்லியன் ஆகியிருந்தது. இதற்கமைய, குறித்த மதிப்பீட்டிற்கும் உள்ளவாறான செலவினத்திற்குமிடையே 73.8 சதவீத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) பல்கலைக்கழகத்தின் 05 உள்ளக வருமான விடயங்களது முன்னைய ஆண்டின் உள்ளவாறான வருமானம் ரூபா 34.9 மில்லியனாகும். எனினும், மீளாய்வாண்டினது வருமானம் ரூபா 30.9 மில்லியன் ஆக மதிப்பிடப்பட்டபோதும், மீளாய்வாண்டினது உள்ளவாறான வருமானம் ரூபா 47.7 மில்லியன் ஆகவிருந்தது. இதற்கமைய, குறித்த மதிப்பீட்டிற்கும் உள்ளவாறான வருமானத்திற்குமிடையே 54.4 சதவீத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) மேற்படி காரணங்களால் மீளாய்வாண்டினது பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் வணக்கத்திற்குரிய மஹோபத்தாயாய அவர்களது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | கையிருப்புக் கட்டுப்பாடு | கையிருப்புப் பதிவேடு கிரமமாகப் பேணப்படுவதில் குறைபாடு நிலவுவதும் மேற்பார்வை நலிவடைந்திருத்தலும் |
| (ஆ) | பொருட் கொள்வனவு நடைமுறை | 2006 சனவரி 25 ஆந் திகதிய பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் நிலவியமை |